பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

# பூமியின் எல்லை-
# -யெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்;..

ஏசாயா 45:22

செய்தி மலர்
2021
செப்டம்பர்

இதழ் : 5
மலர் : 18



# சபை ஊழியரின் அன்பு மடல்



கர்த்தரும் அருமை இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் சாமத்தில் சபையோர் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்

கர்த்தர் கிருபையால் கடந்த மாதத்தில், சுகத்தோடும், பெலத்தோடும், கடந்து வர கிருபை செய்தார். சபையில் நடைபெற்ற அனைத்து ஆராதனைகளிலும், ஜெபகூடுகையிலும், அநேகர் கலந்து கொண்டு தேவனை மகிமைபடுத்திேனோம். தேவ ஆசீர்வாதங்களை பெற்று கொண்டோம். இந்த புதிய மாதத்திலும் கர்த்தர் நமக்கும், நமது சபை மக்களுக்கும் பெரிய புதிய காரியங்களையும் செய்ய போகிற கிருபைக்காகவும் அவரது தயவிற்காகவும், கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். அவரை மாத்திரம் நம்புகிற பிள்ளைகளாய் <u>அவரை நோக்கி பார்ப்போம்</u>

"பூமியின் எல்லையெங்குமுள்ளவர்களே, என்னை நோக்கிப்பாருங்கள்; அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்" ;.. (ஏசாயா45:22)

கிறிஸ்துவிற்குள் மிகவும் பிரியமான சகோதரனே, சகோதரியே, அவரையே அன்றி வேறொருவராலும் நமக்கு இரட்சிப்பில்லை: அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடபடவில்லை, என்பதை மறந்திடவேண்டாம். அதையே விசுவசிப்போம், அவரை நோக்கின முகங்கள் பிரகாசமடைந்தன எந்த மனுஷரையும், பிரகாசிப்பிக்கற ஒளி அவர். "உலகத்திலே வந்த எந்த மனுஷனையும் பிரகாசிப்பிக்கிற ஒளியே அந்த மெய்யான ஒளி." ( யோவான் 1:9) ஆதலால்தான் "நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்; மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது." (மத்தேயு 5:14) இவ்விதமான ஆசீர்வாதத்தை பெற அவரையே நம்பி இருப்போம்.

சங்கீதகாரன் தாவீதை போல எப்பொழுதும் நாமும் சொல்ல வேண்டும். "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன், வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்தி -லிருந்து எனக்கு ஒத்தாசை வரும்" ( சங் 121:1,2) என்று.

3 நமது தேவன் நமக்கு இரக்கம் செய்யும் வரை மட்டுமல்ல எப்பொழுதும் அவரையும், அவரின் பாதத்தையும் விட்டு விடாமல் கிட்டி இருப்போம்.

கிறிஸ்துவிற்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே நீங்களும் கர்த்தரை நோக்கி பாருங்கள், தேவ ஆலோசனையை நிச்சயமாய் பெற்றுகொள்வீர்கள். ஆம் நம் தேவாதி தேவன் ஆலோசனையில் ஆச்சர்யமானவர், அவருடைய ஆலோசனைகள், நித்திய நித்திய காலமாய் நிலைநிற்கும்.

வெற்றியுள்ள வாழ்க்கைக்கும், வல்லமையான ஊழியத்திற்கும் ஒரே வழி, ஜீவவழி இயேசு கிறிஸ்துமட்டுமே என்பதை நம்முடைய வாழ்வில் என்றும் மறந்துவிட கூடாது.

பவுல் சொன்னது போல" "ஒன்று சொல்கிறேன் பின்னைகளை மறந்து முன்னவைகளையே நாடி கிறஸ்து இயேசுவுக்கு தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தய பொருளுக்காக இலக்கை நோக்கி தொடருகிறேன்.(பிலிப் 3:13-14) ஆம் நம்முடைய இலக்கு, குறிக்கோள் தேவனாகட்டும்.

நம்முடைய எல்லா ஆலோனைகளுக்கும், வழிகாட்டுதலுக்கும், நமக்கு அநேகர் உண்டு, நம் பெற்றோர், நம்மை நடத்துகிற ஊழியக்காரர்கள், சகோதர, சகோதரிகள், நமது நண்பர்கள், என பலருண்டு, எல்லோருக்கும் மேலானவர் ஒருவர் இருக்கிறார் அவரை முன் வைப்பபோமா..." "உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்.( சங் 32:8) என்று வாக்களித்தவர், வாக்கு மாறாதவர், நம்மையும் நடத்துவார், ஆமென்.

வருகிற மாதத்திலும் நடைபெறபோகிற அனைத்து ஆராதனைகள், ஜெப கூடுகைகளுக்காக, ஒவவொருவரும் தனது தனிப்பட்ட ஜெபத்திலும் நினைத்து கொள்ளுங்கள், கர்த்தர்தாமே நமது சபையையும், சக விசுவாசிகளையும், ஆசீர்வதித்து. வழிநடத்துவாராக, ஆமென்.

கர்த்தரின் பணியில்,
உங்கள் அன்பு சகோதரன்,
S.ஜெயசேகர்

# காணாமல் போன ஆடு

ஆடுகளை விலைக்கு வாங்க
ஆட்டுகுட்டி ஒன்றை விலையாக கொடுத்தேன்
ஆவியின் கனியை நீ புசிக்க
ஆசையாய் உன்னை அழைக்க வந்தேன்
பாவிகளின் கன்னியின் சிக்கி
பரிசுத்த வாழ்வை கெடுத்தாயே
புல்லை நீ தேடிய பொழுதெல்லாம்
ஊர் சுற்றி
பிள்ளை உனை தேடி
இராபகலாய் காத்திருக்கேன்
உன் ஆயன் நானிருக்க
மேய்ச்சலுக்காய் காத்திருக்க
மேய்பன் இல்லா ஆட்டை போல்
மேட்டிமையாய் இருக்கின்றாய்
நீ பல நூறாய் பலன் தருவாயென
பத்திரமாய் பாதுகாத்தேன்
பாதியிலே வழி விலகி
பாதைமாறி சென்றாயே
அறுவடை காலம் அருகிலிருக்க
ஆயன் நான் காத்திருக்க
சீக்கிரத்தில் நியாயம் தீர்ப்பேன்
சிக்காமல் வந்துவிடு

என் ஆடே நீ எங்கே இருக்கிறாய் ?

அன்பு சகோதரி
வனிதா காளிமுத்து

# இரட்சகர்

பனி பூ போன்ற வாழ்வு
பெரும் புயல் ஒன்று வீச நிலைத் தடுமாறிய படகானது வாழ்க்கை
இயற்கை
கால சூழ்நிலை
சட்ட திட்டம்
முற்று புள்ளி வைக்க துணிய
வாழ்வில் எல்லை இதுதானோ
என நானும் கலங்க
முற்றுபுள்ளியான வாழ்வில்
அடுத்த அத்தியாயத்தை தொடங்கினார்
முன்னைவிட செழிப்பாக
இன்னும்
அற்புதமாய் அதிசயமாய்
அவர்தாம் நம் இரட்சகர்
இயேசு கிறிஸ்து

அன்ப சகோதரி
ஆஸ்லின் ரோனியா சுபின் சிங்

## பாடுகளின் மூலம் நாம் அடையும் ஆசீர்வாதம்

கிறிஸ்த்துவுக்குள் மிகவும் பிரியமான அன்பு தேவ பிள்ளைகளே! இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் அன்பில் வாழ்த்துக்கள்

இந்த செய்தி மலரின் மூலமாக முதல் முதலாக உங்களை சந்திப்பதில் நான் கிறிஸ்துவுக்குள் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.!

இந்த செய்தியின் தலைப்பு பாடுகளின் மூலம் நாம் அடையும் ஆசீர்வாதம் அப்படி நாம் பாடுகளின் மூலம் என்னென்ன ஆசீர்வாதங்களை நாம் சுதந்தரித்து கொள்கிறோம் என்பதை குறித்து தியானிப்போம். ஆதியாகமம் 50:15 முதல் 21 வரை வாசிக்கும் பொழுது.

பொதுவாக ஜனங்கள் நினைக்கின்ற காரியங்கள் கை கூடி வராமல் போனாலோ. அல்லது அவர்கள் திட்டங்கள் நிறைவேறாமல் போனாலோ, மனம் சோர்ந்து போய்விடுவார்கள், கடவுளை விசுவாசிக்காத அவிசுவாசிகள் மனம் சோர்ந்து போகலாம், ஆனால் தேவனை விசுவாசிக்கிற தேவ பிள்ளைகளாகிய நாம் ஒரு போதும் சோர்ந்து போக கூடாது, தேவனுடைய பிள்ளைகளாகிய நமக்கு ஒவ்வொரு பாடுகளும் ஒவ்வொரு சோதனைகளும் ஆசீர்வாதத்தின் வித்துகளாக அமைந்துவிடுகிறது என்பதை நாம் மறந்து விட கூடாது.

ஒருவரும் பாடுகளை விரும்புவதே இல்லை, துன்பங்களும், துயரங்களும் நம்மை சூழ்ந்து கொள்ளும் பொழுது நமது விசுவாசத்திலும் நம்முடைய தரிசனத்திலும், உறுதியாய் நின்றால், அந்த பாடுகள் நம்மை ஆசீர்வாதத்தின் பாதைக்குள் மிக வேகமாக கொண்டு செல்லும்.

யோசேப்பின் வாழ்க்கையை கவனித்து பார்ப்போம் , யோசேப்பு கண்ட இரண்டு சொப்பனங்களை குறித்து ஆதி 37: 5முதல் 11 வசனங்கள் வரை நாம் வாசிப்போம் என்றால், யோசேப்பு சொப்பனத்தை தன் சகோதரர்களுக்கு அறிவித்தான், அதனிமித்தம் அவரை அவரது சகோதரர்கள் இன்னும் அதிகமாய் பகைத்தார்கள், அவன் அவர்களை நோக்கி, நான் கண்ட சொப்பனத்தை கேளுங்கள், நாம் வயலில் அரிகளை கட்டிகொண்டிருந்தோம், அப்பொழுது என் அரி கட்டு நிமிர்ந்து நின்றது உங்களுடைய அரிகட்டுகள் என் அறிகட்டை சுற்றிலும் வணங்கி நின்றது என்றான், அப்பொழுது அவன் சகோதரர்கள் அவனை பார்த்து நீ எங்களை ஆளப்போகிறாயா என்று அவனை அவனது சொப்பனத்தின் நிமித்தமும். அவன் வாரத்தைகளின் நிமித்தமும் அவனை அதிகமாய் பகைத்தார்கள். பின்னர் அவன் 2வது ஒரு செப்பனம் காண்கிறான் அதினிமித்தம் தன் சகோதரர்களை நோக்கி, நான் இன்னும் ஒரு சொப்பனம் கண்டேன் சூரியனும், சந்திரனும், பதினோரு

நட்சத்திரங்களும் என்னை வணங்கினது என்றான். அதை அவன் தந்தை மற்றும் சகோதரர்களிடம் சொன்ன பொழுது, அவன் தகப்பன் அவனை பார்த்து நீ கண்ட சொப்பனம் என்ன? நானும் உன் தாயாரும். உன் சகோதரர்களும் தரை மட்டும் குனிந்து வணங்க வருவோமா என்று அவனை கடிந்த கொண்டார். அவன் சகோதரர்களோ அவன் மேல் கடும் கோபம் கொண்டார்கள். அவன் தகப்பனோ அதை தன்மனதில் வைத்துக்கொண்டாண்.

யோசேப்பு கண்ட சொப்னத்தின் நிமித்தமாக மிகவும் பகைகப்பட்டான். அவனுடைய சகோதரர்கள், அவனை தவறுதலாக புரிந்து கொண்டார்கள். இப்படி ஒவ்வொருநாளும் அவர்களின் கோபம் யோசேப்பின் மேல் அதிகரித்துகொண்டே வந்தது.

ஒரு நாள் அவனுடைய சகோதரர்கள் அவனுடைய ஆடுகளை மேய்க்கும் படியாக புல்லுள்ள இடங்களுக்கு புறப்பட்டு சென்றார்கள். யாக்கோபு, யோசேப்பை அழைத்து அவனுடை சகோதரர்கள் எல்லோரும் ஆடுமாடுகளை நல்ல முறையில் பராமரித்து வருகிறார்களா என்று பார்த்து வரும்படி அனுப்பினான்.இவனும் கடந்து சென்றான். இங்குதான் பாடுகள் ஆரம்பமாகின்றது, எந்த மனிதன் உயர்ந்த நோக்கத்தோடு ,மேன்மையான தரிசனத்தோடு முன்னேர முயர்ச்சிக்கின்றானோ அங்கே அவனை மற்றவர்கள் பகைப்பார்கள் இதுதான் யோசேப்பின் வாழ்க்கையிலும் அவனது சகோதரர்கள் மூலமாக நடந்தது.

அவர்கள் அவனை தூரத்தில் வரக்கண்டு அவன் தங்களுக்கு சமீபமாய் வரும் முன்பே சதி ஆலோசனை செய்து ஒருவரை ஒருவர் நோக்கி இதோ சொப்பனக்காரன்வருகிறான், நாம் அவனை கொன்று இந்த குழிகளில் ஒன்றில் இவனை போட்டு துஷ்ட மிருகம் அவனை பட்சித்தது என்று சொல்லுவோம் வாருங்கள், அவனுடைய சொப்பனம் எப்படி முடியும் என்று பர்ப்போம் என்றார்கள். அவர்கள் யோசேப்பை கொன்று விட முயற்சி செய்தது மாத்தரமல்ல அவனது சொப்பனங்களையும் அழித்துவிட எண்ணினார்கள். தேவன் னொடுக்கும் தரினங்களையும் சொப்பனங்களையும், அழிப்பது என்பது கூடாத காரியம், அப்படி எடுக்கும் முடிவும் அறிவீனர்கள் செய்யக்கூடிய காரியம். காரணம் தரிசனம் என்பது தேவனால் அருளப்படுகிற காரியமானதால் அது எப்பொழுதும் அழிய கூடிய காரியம் அல்ல! பொதுவாக நாம் எப்பொழுது தரிசனங்களையும், சொப்பனங்களையும் காண நேரிடுகிறதோ அப்பொழுதே பாடுகளும் துன்பங்களும் நம்மை தொடரும் என்பதை மனதில் கொள்ள வேண்டும் ஏனெனில் தேவனுடைய திட்டம் அவ்வளவு எளிதாக எவருடைய வாழ்க்கையிலும் நிறைவேறாது என்பதை நாம் அறிந்து தெரிந்து நடந்து கொள்ளவேண்டும்

நமக்கு பாடுகள் வரும் பொழுது, அந்த பாடுகளே நம்மை தரிசனத்தின் பாதைகளிலே கொண்டு செல்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் தரிசனம் மிக முக்கியமான ஒன்று. அப்படி நமக்கு தரிசனம் இல்லை என்றால் அந்த பாடுகளே நம்மை அழித்துவிடும்.

யோசேப்பு தன்னுடைய சகோதரர்களால் கட்டப்பட்டு குழியிலே போடப்படுகிறார். அந்த வழியாக மீதியானிராகிய வியாபாரிகள் வருகிறார்கள். அப்பொழுது யோசேப்பின் சகோதரர்கள் ஒருவரோடு ஒருவர் கலந்து ஆலோசித்து இருபது வெள்ளிகாசுக்காக யோசேப்பை மீதியானிரடத்தில் விற்று போடுகிறாகள். யோசேப்பு அடிமையாக விற்கபட்டாலும், அவன் தன்னுடைய தரிசனத்தை கைவிடவில்லை. கர்த்தர் யோசேப்புக்கு வல்லமையான சொப்பனங்களையும், தரிசனங்களையும், கொடுக்காமல் இருந்தால் பூமியின் மற்ற மனிதர்களை போல ஒன்றும் இல்லாமல் மடிந்த போயிருப்பான், அப்படிபட்ட தரிசனங்களும், சொப்பனங்களும். தேவனால் அருளப்பட்டபடியால் அது அவனுடைய உள்ளத்தில் எரியும் தனல்போல் எரிந்த கொண்டிருந்தது.

யோசேப்பின் வாழ்க்கையை தியானிக்கும் பொழுது அவரது வாழ்வில் நடந்த அத்துணை சம்பவங்களும் தற்செயலாக நடந்தது அல்ல, தேவன் அவருடைய அநாதி தீர்மானத்தோடு அதை அவனுடைய வாழ்வில் அனுமதித்தார்.

முதலாவது அவன் சகோதரர்கள் மீதியானிரடத்தில் விற்றார்கள், மீதியானிரோ அவனை எகிப்திலுள்ள போத்திபாரிடத்தில் விற்றார்கள். அங்கே அவன் அடிமை சேவகம் செய்தான், வேதம் சொல்லுகிறது தேவன் அவனை போர்திபாரின் வீட்டில் ஆசீர்வதித்தார்.அவன் கையிட்டு செய்த ஒவ்வொரு காரியத்திலும் தேவனுடைய ஆசீர்வாதம் நிரம்பி இருந்தது. இதை போர்த்திபார் கவனித்தபோது, தன்னுடைய வீட்டின் முழு அதிகாரத்தையும், அவனுடைய வேலைகாரர்கள் மீதுள்ள ஆளுகையையும் யோசேப்புக்கு கொடுத்தான்.

யோசேப்புக்கு மீண்டும் சோதனை வருகிறது, போர்திபாரின் துணைவியாரின் இச்சைக்கு யோசேப்பு இணங்காததால் அவன் மேல் தவறான குற்றம் சட்டப்படுகிறது. அவன் சிறையிலே அடைக்கபடுகிறான். அந்த சிறைசசாலையில் ராஜாவின் பாணபாத்திரகாரன், சுயம்பாகியின் தலைவனும் அடைக்கப்பட்டிருந்தார்கள், கர்த்தர் யோசேப்புக்கு சிறைசாலையின் தலைவனுடைய கண்களில் தயவு கிடைக்க கிருபை செய்தார். பாணபாத்திரகாரனும், சுயம்பாகிகளின்தலைவனும் அவர்கள் கண்ட சொப்பனத்தை யோசேப்புக்கு சொன்ன பொழுது அதன் அர்த்தத்தை யோசேப்பு அவர்களுக்கு சொன்னான். அந்த காரியங்கள் அவர்களுடைய

வாழ்வில் மூன்று நாட்களில் சம்பவித்தது. அதன் மூலம் பாணபாத்திரகாரனுக்கும் யோசேப்பக்கும் ஒரு நட்பு ஏற்படுகிறது.

பாணபாத்திரகாரன் விடுதலையாகும் போது தன்னுடைய காரியமாக பார்வோனிடத்தில் பேசி தன்னையும் விடுதலையாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். ஆனால் இரண்டு வருடங்கள் ஆன பின் யோசேப்பை பாணபாத்திரகாரன் அப்படியே மறந்து போகிறான். யோசேப்பு காரணமேயில்லாமல் சிறைவாசத்தை அனுபவித்தான்.

இப்படி இரண்டு வருடங்கள் கழிந்தபின் பார்வோன் ஒரு சொப்னம் காண்கிறான் அதின் அர்த்தத்தை தெரிந்து கொள்ள அனைத்து மந்திரவாதிகளையும் , சாஸ்த்திரிகளையும் ஆழைக்கிறான், ஒருவாராலும் சொல்லகூடாமல் போயிற்று. அப்பொழுது அந்த பாணபாத்திரகாரனுக்கு சிறையில் உள்ள யோசேப்பின் ஞாபகம் வருகின்றது. அதனிமித்தம் அவன் ராஜாவிடம் யோசேப்பை பற்றி கூற சந்தர்ப்பம் கிடைக்கிறது.

ராஜாவை சந்திக்க செல்வதால் சிறந்த வஸ்திரங்கள் தரிக்கப்படுகிறது. ராஜாவின் முன்பு கொண்டு நிறுத்தப்படுகிறான்.

ராஜா தான் கண்ட சொப்பனத்தை யோசேப்புக்கு சொல்கிறான். அதன் பொருளை ராஜாவினிடத்தில் யோசேப்பு சொன்னவுடன் ராஜா மாத்திரம் அல்ல அரண்மனையிலுள்ள அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்கள். யோசேப்புக்கு தேவன் கொடுத்த அந்த ஞானத்தை குறித்து அவர்கள் வியந்து பாராட்டினார்கள். இதனிமித்தம் பார்வோனுடைய சபையிலே அரசனுக்கு அடுத்தபடியாக பிரதான அமைச்சராக பதவியில் அமர்த்தபடுகிறார்.

யோசேப்பின் ஒவ்வொரு பாடுகளும் அவரை பொன்னாக விளங்க செய்து படிப்படியாக உன்னதத்தில் அமர வைத்தது

யோசேப்பின் சொப்பனம் நிறைவேறக்கூடிய நேரம் நெருங்கியதால் யோசேப்பின் தகப்பனும் அவனது சகோதரர்களும் அவனை நாடி எகிப்திற்கு வருகிறார்கள். அவனுடைய சகோதரர்களுக்கு பிரதான அமைச்சர் தன் சகோதரன் என்று ஒரு கால கட்டத்தில் தெரிய வருகிறது. சகோதரர்கள் யோசேப்பை கண்டு அஞ்சுகிறார்கள். எங்கே நம்மை பழிவாங்கி விடுவானோ நம் சகோதரன் என்று ஆனால் யோசேப்பு தன் சகோதரர்களை அழைத்து மிக அன்போடு கூட சொன்னான், நீங்கள் எனக்கு தீமை செய்ய நினைத்தீர்கள், ஆனால் தேவனோ இப்பொழுது நடந்து வருகிறபடியே வெகு ஜனங்களை உயிரோடு காக்கும்படிக்கு அதை நன்மையாக முடிவு பண்ணினார் என்றான். ( ஆதி 50:20)

தேவ பிள்ளைகளே! கர்த்தர் நமக்கு தரிசனத்தை தந்திருப்பார் என்றால், அந்த தரிசனத்தை நோக்கி பொருமையோடும், விசுவாசத்தோடும், முன்னேறுவோம் பாடுகளை குறித்து ஒரு போதும் பயப்படவேண்டாம். அவைகள் எல்லாம் நமக்கு ஜெயத்தை கொண்டுவரும். ஒரு வேளை சில சூழ்நிலைகள், சில சம்பவங்களும் நமக்கு விரோதமாக காணப்படும், ஆனாலும் கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் இடைபட்டு அதை ஆசீர்வாதமாக மாற்றிதருவார். தேவனில் அன்பு கூறுகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடக்கும்.

யோசேப்பின் வாழ்க்கையை தியானித்து நம்முடைய சோதனையில் நாம் சோர்ந்து போகாமல் நாம் நம்முடைய விசுவாசத்தை கர்த்தர் மேல் வைத்து ஜெயத்தை தரித்துகொள்வோமாக!

தேவன்தாமே நம் ஒவவொருவரையும் ஆசீர்வதிப்பாராக!

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோ. இயேசுரெத்தினம்

( பக்கம் 14ன் தொடர்ச்சி)

யோவானை சாலமோன் மிகவும் நேசித்தபடியால் தமது பள்ளியில் படித்து மனந்திரும்பிய பிள்ளைகளுக்கு சூட்டிய 2 ஞானஸ்தான பெயர்களில் முதல் பெயர் யோவானாக இருந்தது.

காலை மாலை ஆராதனை நடத்தவது, வீடு சந்திப்பது, ஜெப புத்தகம் மற்றும் வேதாகமம் மொழி பெயர்ப்பு என சிறப்பான பணி செய்தார். நிக்கோபாரி மொழிக்கு வரி வடிவம் இல்லாதிருந்தபோது ஆங்கில எழுத்துக்களை பயன்படுத்தி வரிவடிவம் கொடுத்தார். நிக்கோபாரி வேதாகமத்தை வெளியிட அச்சகம் ஒன்று விலைக்க வாங்கினார். கார் நிக்கோபார் மக்களின் ஆத்தும ஈடேற்றத்திற்காக அயராது பாடுபட்ட சாலமோன் உடலில் பெலன் குன்றியது. நோய்வாய்பட்டு 1909ல் விண்ணுலக வாழ்வை தொடங்கினார்.

கார் நிக்கோபார் மக்கள் கூறும் போது "அப்போஸ்தலனாகிய சாலமோன் இங்கு வந்து உதித்திராவிட்டால், நாங்கள் தென்னை ஓலையில் உள்ள குச்சிகளால் ஆண்கள் ஆடையைதான் உடுத்தி இருப்போம் நித்திய பேரின்பம் பெறாமல் அழிந்திருப்போம்" என்றார்கள்..

" கோதுமை மணி செத்ததேயாகில் மிகுந்த பலனை கொடுக்கும்" என்ற நம் ஆண்டவரின் திருவாக்கு எத்தனை உண்மையாயிற்று. மார்சி 15 அன்று நாம் யாவரும் ஒன்று சேர்ந்து கார் நிக்கோபார் தீவு மக்களுக்காக ஜெபிப்பது அவசியமன்றோ?

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..
... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வன். ஆன்டனி கமலதாசன்
செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வி. மோனிகா ஷெர்லின்
செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
செல்வன். அமீஸ் டேவிட்
செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
சகோ. ஷர்மன்ராஜ்
செல்வி. டெலிஷா காட்லின்
சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்
சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
செல்வன். சந்தோஷ் ஜெயகுமார்
செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
சகோதரி. சுபா ஸ்டீபன்
செல்வி. ஜெனோலின் ஜெரின்
செல்வி. அறிவழகி கலிய மூர்த்தி

சகோ. மணிராஜ்
சகோதரி. அமுதா சுகுமாரன்
செல்வி. பெர்டினா சுனில்
செல்வன். பிரயான் சதீஷ்குமார்
செல்வி. தீபா ராஜன்
செல்வன். விக்டர் செங்குட்டுவன்
செல்வன். ஜாண் ஜோஸ்வா மில்லர்
சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
செல்வி. ரீனா வேளாங்கன்னி
செல்வன். ஆரோன் டேனியல்
சகோதரி. அனிதா ஜஸ்டஸ் விஜயகுமார்
சகோ. தினேஷ் குமார்
சகோதரி. பிளஸ்ஸி பியூலா
செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்
செல்வி. ரீன்ஸி வேளாங்கன்னி

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்(ஆதி .22:18)

திருமதி & திரு. அருள்மணி
திருமதி & திரு. ஜோசப் பாபுராஜ்
திருமதி & திரு. வில்சன் செல்லையன்
திருமதி & திரு. பாலகிருஷ்ணன்

திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்
திருமதி & திரு. மார்க் ஆன்டனி
திருமதி & திரு. ஃபிராங்கிளின்

*நீ வலதுபுறத்திலும் இடதுபுறத்திலும் இடங்கொண்டு பெருகுவாய்;*

*ஏசாயா 54:3*

# 2021 செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 6:30 முதல் இரவு 8:00வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 5/9/2021 | சகோ. ரவிஜான்பீட்டர் | சகோ. ஆரோக்கியராஜ் |
| 12/9/2021 | சகோ. சாம் ஆனந்த | சகோ.ஃபிராங்ளின்(NBTC) |
| 9/19/2021 | சகோ. கிருஸ்டோபர் GTC | சகோ.எபிநேசர் M |
| 25/09/2021 | சகோ. எபிநேசர் V | சகோ.தாமஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் காலை 10 முதல் 12 வரை மாலை 3:00 முதல் 5:00

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 3/9/2021 | சகோ. பிரசாத் சுந்தரம் | சகோ. ஜெகநாதன் |
| 10/9/2021 | சகோதரி. ஆரோக்கியதாஸ் | சகோ.ஸ்டாலின் |
| 9/17/2021 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 9/24/2021 | சகோ. இயேசுரெத்தினம் | சகோ. ஐசக் துரை |

**09/09/2021 அன்று முழு இரவு ஜெபம்**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – இரவு 10:00 முதல் அதிகாலை 1:00 மணிவரை

**23/09/2021 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம் – மாலை 6:30 முதல் இரவு 8:00 மணிவரை

(கூடுகையை பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் சகோதரி. விஜயா ஆண்டனி)

(வேத வினா எண்ணாகமம் பகுதி )

**24/09/2021 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

(இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு நேரம்– வெள்ளிகிழமை காலை ஆராதனைக்கு பின் )

15 வயதிற்கு கீழுள்ள சபையின் பிள்ளைகளுக்கு நமது சபை வீட்டில் வைத்து அனைத்து வெள்ளிகிழமைகளிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை ஆராதனை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது பெற்றோர்களுடன் ஆராதனையில் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்று செல்லவும், ஞாயிறு ஆராதனை தற்சமயம் சபை வீட்டில் வைத்த மாலை 6:30 :மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது செவ்வாய் கிழமைகளில் குடும்ப ஆசீர்வாத ஜெபம் மாலை 6:30 மணி முதல் 8:00 மணி வரை நடைபெறுகிறது அனைவரும் கலந்து கொண்டு தேவ ஆசீர்வாதத்தை பெற்றுச் செல்லவும் ( சபையின் அனைத்து ஆராதனையிலும் தவறாமல் கலந்து கொள்ளவும்)

# 2021 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**

1 யாருடைய வழி ராஜ பாதையாய் இருக்கிறது?

2. யாருடைய பாதை மரித்தோரிடத்தில் சாய்கிறது?

3. இருதயங்களை நிறுத்து பார்க்கிறவர் யார்?

4. ஆவிகளை நிறுத்து பார்க்கிறவர் யார்?

5. தன் மனதை அடக்குகிறவன் யார்?

6. யாருடைய வீடு பாதாளத்திற்கு போகும் வழி?

7. "பணப்பையை தன் கையிலே கொண்டு போனான்" என்றது யார்?

8. கடுங்கோபி எதற்குள்ளாவான்?

9. வெளியிலே சிங்கம் வீதியிலே கொலையுண்பேன் என்று சொல்லுகிறவன் யார்?

10. சிங்கத்தை போல் தையிரியமாய் இருப்பவன் யார்?

11. "நீ உன்னை தப்பித்து கொள்ள ஒன்று செய்" என வாசிப்பதெங்கே?

12. "உன் மந்தைகளின் மேல் கவனமாயிரு" என்னும் ஆலோசனை வசனம் எங்கு உள்ளது?

13. குரோதத்தை ஆற்றுவது என்ன?

14. "கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்" என்று வாசிப்பது எங்கே?

15. "சமாதானம் பண்ணுகிற ஆலோசனைகாரருக்கு உள்ளது சந்தோஷம்" என்றது யார்

விடைகளை வருகின்ற 20-09-2021க்குள்(whatsApps #66015503) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிபிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் "நீதிமொழிகள்"புத்தகத்தில் இருந்து 2,6,7,12,15,16,19,21,22,27,28 ஆகிய அதிகாரங்களில் பதிலை கண்டுபிடிக்கவும்

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2021 –ஆகஸ்டு மாத வேத வினாவுக்கு விடை

1. சூரியன் – சந்திரன் யோசு. 10:13
2. தென்நாடு – வடநாடு யோசு. 17:10
3. ஆத்துமாக்களைக் குறித்து யோசு. 23:11
4. இரவும் பகலும் தியானிக்க வேண்டும். யோசு. 1:8
5. காலேபை ஆசீர்வதித்து – எபிரோனை யோசு. 14:13
6. இஸ்ரவேல் புத்திரருக்கு – கற்கள் யோசு. 4:7
7. இஸ்ரவேல் புத்திரருக்கு யோசு. 10:21
8. யோசுவா யோசு. 24:30
9. எரிகோவுக்கு கீழெல்லையான கில்காலிலே யோசு. 4:19
10. மோசேயின் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதியிருக்கிறதை யோசு. 23:6
11. கில்கால் யோசு. 5:9
12. கர்த்தரே தேவன் என்பதற்கு அந்தப் பீடம் நமக்குள்ளே சாட்சி யோசு. 22:34
13. சகல வெள்ளியும், பொன்னும், வெண்கலத்தினாலும் இரும்பினாலும் செய்யப்பட்ட பாத்திரங்கள். யோசு. 6:19
14. பலிபீடம் – ஏபால் பர்வதத்தில் யோசு. 8:30
15. விருத்தசேதனம் பண்ணப்பட்ட ஜனங்கள் யோசு. 5:8

## 2021 ஆகஸ்டு மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. வனிதா காளிமுத்து
Sis. ஹெலன் ஷீஜா ராபின்
Sis. நகோமி ஜான்ஸன்
Sis. எழிலரசி டேனியல்
Sis. லதா கிருஸ்டோபர்

........உன் சந்ததிக்கு இந்தத் தேசத்தைக் கொடுப்பேன்.. *ஆதியாகமம் 12:7*

## மிஷனரி வரலாறு

## "கார் நிக்கோபார் அப்போஸ்தலன்"

## வே. சாலமோன்

தமிழ் நாட்டை பூர்வீகமாக கொண்ட வேதப்பன் என்பவர் ரங்கூனில் வாழ்ந்து வந்தார் அவரது மகன் வே.சாலமோன் படிப்பையும், திருமணத்தையும் அங்கேயே முடித்து அங்கேயே வேலை பார்த்து கொண்டிருந்தார். அவருக்கு அந்தமானுக்கு பணி மாறுதல் வழங்கப்பட்டது. வானிலை ஆராய்ச்சியாளராக 1885 ல் அந்தமான் தலைநகர் போாட்பிளேயரில் சாலமோன் பணியை தொடங்கினார். வானிலை ஆய்வுக்காக அவர் மற்ற தீவுகளுக்கு சென்று வந்து கொண்டிருந்தார். அப்பொழுது ஓய்வு நேரங்களில் அனைத்து தீவு மக்களுக்கும் இயேசுவின் அன்பை அறிவித்து வந்தார். போர்ட் பிளேயரில் தன்வீட்டில் ஒரு பள்ளிகூடத்தை தொடங்கி நிக்கோபார் தீவிலிருந்து சில சிறு பிள்ளைகளை அழைத்து வந்து அறிவொளி வீசி அகவிருள் நீக்கும் ஊழியத்தில் ஈடுபட்டார். அப்பிள்ளைகளுக்கு இங்கு தங்கி இருக்க பிடிக்காததால் தனியொரு படகில் தங்களது வீடு செல்ல முற்பட்ட போது. அவர்கள் காணாமல் போயினர். இதனால் பலத்த எதிர்ப்பு வரவே பள்ளியை மூட வேண்டியதாயிற்று.

இப்பொழுது சாலமோன் புதிய தரிசனம் பெற்றார். நிக்கோபர் மக்கள் தம்மிடம் அழைத்து வந்து சுவிசேஷம் சொல்வதற்கு பதிலாக, அவர்களைச் தேடி தாமே சென்று சுவிசேஷம் சொல்ல தீர்மாணித்தார். அதற்காக தமது அரசு பதவயை ராஜினாமா செயதார். அரசு பணியை அவர் விட்ட போது அவருக்கு 5 ஆண்மக்கள் இருந்தனர். ஆயினும் கவலை பட வில்லை தேவனை நம்பி புறப்பட்டார்.

1896 மார்ச் 15ஆம்தேதி கார் நிக்கோபார் தீவிலுள்ள கிமியஸ் (KIMIUS) கிராமத்திற்கு அருகே சாலமோன் குடும்பமாக கரையிறங்கினார். (தன் நிணைவாக ஆண்டுதொறம் மார்ச் 15ல் இத் தீவு மக்கள் விழா கொண்டாடி மகிழ்கின்றனர். என்பது குறிப்பிடத்தக்கது) நிக்கொபார் தீவுக்கு சென்ற முதல் மிஷனரி என்று சாலமோனை கூற முடியாவிட்டாலும், முதல் இந்திய மிஷனரி என்று கூறலாம். அதோடு சுவிசேஷ ஊழியத்தில் மற்ற மிஷனரிகளை விட வெற்றி பெற்ற மிஷனரி என்று கூறலாம்.

சாலமேனின் பிரசங்கத்தை நிக்கபோரி மொழியில் மொழி பெயர்த்து இப்ராஹீம் என்ற இஸ்லாமியர் இவரது வாழ்க்கையை கண்டு ஆண்டவரை ஏற்றுக்கொண்டார். சில ஆண்டுகளுக்கு பின்னர் நிக்கோபாரி மொழியில் தேர்ச்சி பெற்று வேதாகமத்தை அம்மொழில் சாலமோன் மொழி பெயர்த்தார்.

சாமோனின் துணைவியார் எலிசபெத் 1901 ஜனவரி 23 ல் கிறிஸ்துவுக்குள் மரித்தார். தாயை இழந்த பிள்ளைகளுக்கு சாலமோண் தாயாக வாழ்ந்த நிலையில் மூத்த மகன் தானியேல் 10 வயதிலும், இளைய மகள் 8 வயதிலும் ஒரே அண்டில் மரித்தனர், சாலமோனோ மனந்தளராது மிஷனரி ஊழியத்தில் ஈடுபட்டார். ( தொடர்ச்சி பக்கம் 9ஐ பார்க்க)

# Praise The Lord

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகாதரிகளே உங்கள் யாவுருக்கும் இயேசுகிறிஸ்துவின் இனிய நாமத்திலாலே வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன்!

இன்றும் இந்த உலக வாழ்க்கையில் நாம் பிறர்க்கு கிறிஸ்தவர்களாய் காணப்படுகிறோமா? அல்லது கிறிஸ்துவை உடையவர்களாக அறியபடுகிறோமே என்று நாமே சோதித்து பார்ப்போம்.

கிறிஸ்துவை உடையவர்களாகிய நாம் இருப்போமாகில் ஆண்டவர் நம்மிடம் எதிர்பார்க்கும் இந்த மூன்று காரியங்கள் நம்மிடத்தில் காணப்படுகிறதா? என்று நம்மை நாமே சோதித்து பார்ப்போம் முதலாவது நாம் ஆண்டவரை விசுவாசிக்க வேண்டும்:

ஆண்டவாராகிய இயேசு கிறிஸ்து மனுஷகுமாரனாக வந்து இந்த பூமியில் ஊழியம் செய்த போது அவரிடத்தில் அநேகர் வந்து வேண்டிகொண்ட போது அற்புதங்களும், அதிகாரங்களும், ஆண்டவர் செய்தார் என்று பார்க்கிறோம், ஆனாலும் ஆண்டவர் அவர்களிடத்தில் எதிர்பார்த்த காரியம் என்னவென்றால் விசுவாசமே மத் 17:20ல் பார்க்கும் போது இயேசுவை பற்றி கேள்விபட்ட 12 வருடமாய் பொரும்பாடுள்ள ஸ்த்ரீ அவர் மேல் விசுவாசம் வைத்து அவருக்கு பின் சென்று அவருடைய வஸ்திரத்தை தொடுகிறாள். இயேசு அவளை பார்த்து மகளே திடன்கொள் உன் விசுவாசமே உன்னை இரட்சித்தது என்றார், அந்நேரமே இந்த ஸ்திரி சொஸ்தமானாள் என்று பார்க்கிறோம்.

மேலும் மத்தேயு 8:5 பார்க்கும் போது நூற்றுக்கு அதிபதி என் வேலைகாரன் என் வீட்டிலே திமிர்வாதையில் கொடிய வேதனைபடுகிறான் அவனை சொஸ்தமாக்கப்பட வேண்டும் என்று இயேசுவிடம் வேண்டிக்கொண்டான்.

இயேசுவோ நான் வந்து அவனை சொஸ்தமாக்குவேன் என்று ஆயத்தபடும் போது , அந்த நூற்றுக்கு அதிபதி ஆண்டவரே நீர் என் வீட்டிற்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல ஆகவே நீ ஒரு வார்த்தை சொல்லும் அப்பொழுது என் வேலை காரன் சொஸ்தமாவான் என்று வேண்டிக்கொண்டான்.

இயேசுவோ தமக்கு பின் சென்றவர்களை நோக்கி இஸரவேலருக்குள்ளும் நான் இப்படிபட்ட விசுவாசத்தை காணவில்லை

என்று சொல்லி , நீ போகலாம் உன் விசுவாசத்தின்படியே உனக்கு ஆகக்கடவது என்ற போது அவன் வேலைக்காரன் அந்நேரமே சொஸ்தமானான் என்று பார்க்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே இன்னும் அநேக காரியங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மிடமிருந்து விசுவாசத்தை எதிர்பார்க்கிறார் என்பதை உணர்ந்தவர்களாக ஆண்டவரை விசுவாசிக்கிறவர்களாகிய நாம் காணப்படும் போது தேவன் நம்முடைய வாழ்க்கையிலும், ஊழியங்களிலும், அற்புதங்களையும், அதிசயங்களை செய்ய வல்லவராய் இருக்கிறார்.

இரண்டவது ஆண்டவருக்குள் நிலைத்திருக்க வேண்டும். அடுத்தபடியாக ஆண்டவருக்கென்று கனி கொடுக்கிற வாழ்க்கை நமக்குள் காணப்பட வேண்டும். கிறிஸ்துவுக்குள் பிரியமான வாலிப சகோதரனே. சகோதரியே, யோவான் 15:4 ல் பார்க்கும் பொழுது என்னுள் நிலைத்திருங்கள் நானும் உங்களில் நிலைத்திருப்பேன், கொடியானது திராட்சை செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய் கனி கொடுக்க மாட்டாது அது போல நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால் கனி கொடுக்கமாட்டீர்கள் என்று ஆண்டவர் சொல்கிறதை காண்கிறோம்

பிரியமான வாலிப சகோதரனே, சகோதரியே, கர்த்தருக்குள் நிலைத்திருக்குதல் என்று பார்க்கும் பொழுது ஆண்டருடைய வாழ்க்கைக்கு கீழ்படிந்து அனுதினம் வேதம் வாசிக்கிறவர்களாகவும், ஜெபம் பண்ணுகிறவர்களாகவும், ஆண்டவரை ஆராதிக்கிறவர்களாக அவரோடு ஐக்கியம் உள்ளவர்களாகவும், நாம் காணப்படும் போது. நாம் நிச்சயமாய் ஆண்டவருக்கு கனி கொடுக்கிறவர்களாய் மாறி விடுவோம்.

கலாத்தியர் 5:22ல் பார்க்கும் பொழுது, ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொருமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம், என்று வாசிக்கிறோம், இப்படிபட்ட ஆவியின் கனிகள், நம்மிடம் காணப்படும் பொழுது நம்மை காண்கிற பிறர்கும் நாம் கிறிஸ்துவை தரித்தவர்களாக காணப்படுவோம்,

பிரியமான வாலிப சகோதரனே, சகோதரியே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்பது நம் எல்லார் மேலும் விழுந்த கடமையாக காணப்படுகிறது ஆகையால் நாம் இந்த நாளிலும், கிறிஸ்துவை அறிவிப்பவர்களாக மட்டும் இல்லாமல் அவரை போலவே பிறர்க்கு நாம் காணப்பட முயற்சி செய்வோம் கர்த்தருடைய நாமம் மகிமைபடுவதாக !

## காத்திருப்போம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளுக்கு இயேசு கிறஸ்துவின் இனிய நாமத்தில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! இந்த மாத சபையின் செய்திமலர் மூலமாக சந்திப்பதில் கர்த்தரின் நாமத்தில் மகிழ்ச்சியடைகிறேன்.

பிரியமான சகோதரிகளே இன்று நாம் தியானிக்க இருக்கிற காரியம் காத்திருப்போம் என்கிற தலைப்பில் தியானிப்போம் !

தியானத்திற்கு ஆதாரமாக ரோமர் 8 ஆம் அதிகாரம் 19 ஆம் வசனத்தை வாசிக்கும் பொழுது. "மேலும் தேவனுடைய புத்திரர் வெளிப்படுவதற்குச் சிருஷ்டியானது மிகுந்த ஆவலோடே காத்துக்கொண்டிருக்கிறது" என்று வாசிக்கிறோம்.

இரட்சிக்கபட்ட நாம் ஒவ்வொருவரும் இயேசுவின் வருகைக்காக எதிர்பார்த்து ஆயத்தமாய் காத்திருக்கிறோமா? இரட்சிக்கபட்ட திரளான ஜனங்கள் கர்த்தருடைய வருகைக்கென்று அவர் வரும் பொழுது அந்த மகிமையில் எடுத்துக்கொள்ள ஆயத்தமாய் காத்திருக்கிறார்கள்? கர்த்தருடைய வருகைக்கான பல அடையாளங்கள் நிறைவேறியதையும் இது கடைசிகாலம் என்பதையும் உணர்ந்திருக்கிறார்கள், அது மட்டுமல்ல சர்வசிருஷ்டியும் இயேசுவின் வருகைக்காக இயேசுவை ஏற்றுக் கொண்டு மிகுந்த ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறது.

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதரிகளே இயேசுவை ஏற்று கொண்ட நாம் இதை நாம் உணர்ந்து கொண்டால் அவருடைய அன்பை ருசித்தவர்களாய் அவருக்கு பிரியமான காரியங்களை செய்வதற்கு நம்முடைய இருதயம் ஆவல் கொள்ளும். பாவத்தை மேற்கொண்டு பரிசுத்தமாய் வாழவும், ஜெபத்திலும் வேதத்தை தியானிப்பதிலும், எப்பொழுதும் நாம் அவரையே சார்ந்திருக்கிறவர்களாய் காணப்படுவோம். எந்த நெருக்கடியான சூழ்நிலைகளை பிசாசானவன் நம்முடைய வாழ்க்கயில் கொண்டு வந்தாலும் ஜெயமான வாழ்க்கை வாழ முடியும்

2 கொரி 5:14 பவுலும் கூட தனது ஊழியத்தில் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது என்றும் மேலும் எந்நேரமும் கொல்லபடுகிறோம் அடிக்கப்படும் ஆடுகளைபோல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி உபத்திரவங்கள், சோதனைகள் வந்தாலும் எதுவும் கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிக்க முடியாது. ஏனெனில் ஆவியானவர் நம்மை பெலப்படுத்தமபடி நம்மோடு வாசம் பண்ணுகிறரவராய் இருக்கிறார். அவருடைய சிலுவைபாடுகள், அவர் நமக்காக சிந்தின இரத்தம், அவமானம், நிந்தை இவற்றிக்கு முன்னால் நமக்கு வரும் சோதனைகள் பெரிதல்ல. கிறிஸ்துவை நீங்கள் ருசிக்க ருசிக்க பரிசுத்த ஆவியினால் தேவனுடைய அன்பு உங்கள் இருதயங்களில் ஊற்றப்படுகிறதை உணர்வீர்கள். அனுதினம்

அவருடைய அன்பை ருசித்தவர்களாய் அவர் சமூகத்தில் காத்திருப்போம் ஆவியானவராலே ஆத்துமாவில் பெலனடைவோம் நம்பிக்கையுடன் காத்திருப்போம்.

எபிரேயர் 11:1–விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

நாம் காணக்கூடாத ஆசீர்வாதங்கள் அதாவது நாம் நம்பிக்கை வைக்க முடியாத ஆசீர்வாதங்களை நிச்சயம் பெற்றுக் கொள்வோம் என்று நம்பிக்கையுடன் காத்திருப்பதுதான் விசுவாசம்

ரோமர் 8:25 நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருப்போம்.

ஆம் பிரியமானவர்களே நம்முடைய விசுவாச வாழ்க்கைக்கு பொறுமை மிகவும் அவசியமாய் இருக்கிறது. நம்மில் அனேகர் சில ஆசீர்வாதங்கள் தாமதமாகும் போது பொறுமை இழந்தவர்களாய் விசுவாசத்தைவிட்டு விலகி பின்வாங்கி போனவர்களாய் இருக்கிறோம். நாம் அவரை காணாமல் அவர் வருவார் என்ற வார்த்தையில் விசுவாசம் வைத்தவாகளாய் பொறுமையுடன் அவருடைய வருகைக்காய் நம்மை ஆயத்தபடுத்தவோம்

தேவன் வேதத்தின் வழியாய் நமக்கு தந்திருக்கிற வார்த்தைகளை விசுவாசித்து அவர் தருகிற ஆசீர்வாதங்களுக்காய் பொறுமையோடு காத்திருப்போம்.

## ஆயத்தமாய் காத்திருப்போம்

மத்தேயு 24:44 – நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.

ஆம் பிரியமானவர்களே ஆவியானவராலே நாம் நடத்தப்படும் பொழுது தேவனுடைய இராஜ்ஜயத்திற்கு சுதந்தரவாளிகளாய் மாற்றப்படுவோம். நம்முடைய சிந்தனையில், பேச்சில், நடத்தையில், பரிசுத்தம் காணப்படவேண்டும், அவர் தாமதிக்கிறார் என நிற்விசாரமாய் இருப்போமாகில் நித்திய இராஜ்ஜியத்தில் அவரோடு வாழும் நித்திய வாழ்க்கையை இழந்து விடுகிறர்களாய் காணப்படுவோம்.

ஆம் பிரியமானவர்களே ஆயத்தமாய் காத்திருந்து பத்து கன்னிகைகளை போல நாமும் ஆயத்தமாய் இருப்போமானால் கர்த்தருடைய ஆவியானவராலே நாமும் எடுத்துக் கொள்ளப்படுவோம் நாமும் அயத்தமாய் காத்திருப்போம் ஆவியானவர்தாமே நம் ஒவ்வவொருவரையும் ஆசீர்வதித்து வழிநடத்துவாராக ஆமென் !

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி
ஹெலன் ஷீஜா ராபின்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில


















செயற்குழு உறுப்பினர்கள்



சபை முதன்மை ஊழியர்

சகோ. ஜெயசேகர்

96646444

செயலாளர்



சகோ. இயேசு ரெத்தினம்

23924262 - 97545812



பொருளாளர்

சகோ. ஜெகநாதன்

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி



சகோதரி . எப்சிபா ஸ்டீஃபன்

67792009 - 56640551



வாலிப ஐக்கிய தலைவர்

சகோ. பிரசாத் சுந்தரேசன்

60781168

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்

எதுவாக இருந்தாலும்

எங்களுக்கு தெரிவிக்கவும்

உங்களுக்காக ஜெபிக்க

<u>ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.</u>

Private Circulation only